# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2053 • நவம்பர் 12 2022

Weekly E-paper • November 12, 2022




# வரலாறு அவர்களை விடுதலை செய்தது !

சுப.வீரபாண்டியன்

## பொருளாதார அளவுகோல் என்பது சமூகநீதிக்கு எதிரானது!

வழக்கறிஞர் அருள்மொழி

## பா.ஜ.கவின் பாச்சா உருண்டை!

தலையங்கம்

## சபாஷ்! சரியான போட்டி!

எழில்.இளங்கோவன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● நவம்பர் 12 2022 Weekly E-paper ● November 12, 2022


## வரலாறு அவர்களை விடுதலை செய்தது !

சுப.வீரபாண்டியன்

எத்தனை போராட்டங்கள். எத்தனை நீதிமன்றங்கள், செங்கொடி உட்பட எத்தனை உயிர்ப்பலிகள்!

எல்லாம் கடந்து 31 ஆண்டுகளுக்குப் பிறகு முழுமையாய் திறந்து இருக்கின்றன சிறைக் கதவுகள்! இளமை எல்லாம் எரிந்து முடிந்தபின் இன்று ஏழு பேரும் வெளியில் வந்திருக்கிறார்கள்.

7 பேருக்கும் தூக்குத் தண்டனை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்ட நிலையில், 2000 ஆம் ஆண்டு நளினிக்கு மட்டும் தூக்குத் தண்டனையை வாழ்நாள் தண்டனையாக மாற்றி அறிவித்தார் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர்.

எப்படி நளினியின் தண்டனையைக் குறைக்கலாம் என்று கேட்டனர் சிலர். ஏன் நளினிக்கு மட்டும் தண்டனை குறைப்பு என்று எதிர்க் கேள்வி கேட்டார்கள் வேறு சிலர். எந்த ஒன்றையும் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று உடனடியாகச் செய்து விட முடியாது. படிப்படியாகத்தான் மாற்றங்கள் நிகழும்.

திமுக கழகம் எதிர்க்கட்சியாக இருந்த போதும், ஆளுங்கட்சியாக இருந்த போதும் எழுவரின் விடுதலைக்காக குரல் கொடுக்கத் தவறியதில்லை. இறுதியில் பேரறிவாளன் விடுதலையாக, மீதமுள்ள அறுவரையும் விடுதலை செய்து விடலாம் என்னும் தீர்மானத்தை இன்றைய தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்தது. ஆளுநர் உடனடியாகச் செயல்பட்டிருந்தால், இந்த அறுவரின் விடுதலை இன்னும் முன்பாகவே வந்திருக்கும். எவ்வளவு காலம் தாழ்த்த முடியுமோ, அவ்வளவு காலம் தாழ்த்தினார் ஆளுநர். ஆனால் உச்ச நீதிமன்றம் தலையிட்டு இன்று நீதியை நிலை நிறுத்தி இருக்கிறது.

இது ஆறு பேருக்குக் கிடைத்த விடுதலை மட்டும் இல்லை, ஆளுநருக்கு மறைமுகமாக வழங்கப்பட்டிருக்கும் தண்டனையும் ஆகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் தீர்மானங்களை நியமனப் பதவிகளில் இருக்கும் ஆளுநர்கள் கிடப்பில் போடக்கூடாது என்பதற்கான வழிகாட்டுதலாகவும் இந்தத் தீர்ப்பு அமைந்திருக்கிறது! எனவேதான் இது மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு வரலாறு அளித்துள்ள அணிந்துரை என்று கூறுகிறார் தமிழ்நாடு முதலமைச்சர்.

ஈழப் போராட்டத்திற்கும், போராளிகளுக்கும் முழுமையாக ஆதரவு நிலையில் எம்ஜிஆர் காலத்திலும், முழுமையான எதிர்ப்பு நிலையில் ஜெயலலிதா காலத்திலும் இருந்தது. பிறகு ஒரு கட்டத்தில், ஜெயலலிதாவும் எழுவர் விடுதலைக்காகச் சட்டமன்றத்தில் குரல் கொடுத்தார். மதிமுகவின் பொதுச் செயலாளர் வைகோ, தன்னால் இயன்றவைகளை எல்லாம் அவர்கள் விடுதலைக்காகச் செயல்படுத்தினார். தமிழ் அமைப்புகள், ஜனநாயக சக்திகள் ஆகியனவும், எழுவரின் விடுதலைக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தன. அனைவரும் மகிழ நேற்று வந்திருக்கிறது, நல்ல தீர்ப்பு!

மானுட வாழ்வில் 30 ஆண்டுகள் என்பது ஒரு குறிப்பிடத்தக்க பகுதி. அது சிறையில் கழிந்து விட்டது. இனிவரும் நாள்கள் இனிமையாய் அமையட்டும்!!

●

## பொருளாதார அளவுகோல் என்பது சமூகநீதிக்கு எதிரானது!

நேர்காணல் - வழக்கறிஞர் அருள்மொழி



**சமூகம் மற்றும் கல்வியில் பின் தங்கியவர்களுக்கு மட்டுமே அரசியலமைப்புச் சட்டம் இட ஒதுக்கீடு வழங்கியுள்ளது. இந்நிலையில் பொருளாதார அடிப்படையில் 10 % இட ஒதுக்கீடு என்பது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானதுதானே?**

இடஒதுக்கீடு என்பது, ஏற்கனவே கல்வியிலும் சமூக ரீதியாகவும் பின்தங்கி உள்ள மக்களுக்கு அவர்களுடைய வாய்ப்பைக் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் உறுதி செய்யக்கூடிய ஒரு ஏற்பாடு அல்லது சட்டப்பாதுகாப்பு. ரிசர்வேஷன் என்பது சலுகையல்ல உரிமை. நாம் ரயிலில் செல்லும் பொழுது நம்முடைய இடத்தை உறுதி செய்வது, சலுகை என்று சொல்லப்பட முடியாது. அதைப்போல நம்முடைய சமுதாயத்தில் இடஒதுக்கீடு என்பது வர்ணாசிரம ரீதியாக, மனு தர்மத்தின் மூலமாக மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்து நடைமுறையில் இருந்து வருகிறது. அந்த இடஒதுக்கீடானது கோயில், அக்ரஹாரம், குடியானவர் தெரு, வியாபாரிகள் தெரு, அடுத்து ஊருக்கு வெளியில் இருக்கும் சேரி என்பதாக ஊரைப் பிரித்து, அவர்கள் இருக்க வேண்டிய இடத்தை உறுதி செய்தது. அதைப்போல குடிக்கிற நீரும், குளிக்கிற குளமும், புதைக்கப்படுகிற சுடுகாடும்கூட இப்படியாகப் பிரித்து இடஒதுக்கீடு செய்யப்பட்டதுதான். இந்த இட ஒதுக்கீட்டின் காரணமாக, பள்ளிக்கு வரக் கூடாதவர்கள், படிக்கக் கூடாதவர்கள் என்று ஒரு பெரும் சமூகம் ஒதுக்கப்பட்டு விட்டது. அந்தச் சமூகத்திலேயே ஒரு பிரிவு பார்க்கப்படக்கூடாதவர்கள், தீண்டப்படாதவர்கள் என்ற பிரிவுக்குத் தள்ளப்பட்டு அவர்கள் ஊருக்கு வெளியிலேயே வாழ வைக்கப்பட்டார்கள். இந்தப் பிரிவினையால் ஏற்பட்ட ஒரு மிகப்பெரிய குறைபாடு, உள்ளத்தில் ஏற்பட்ட ஊனம் என்று வேண்டுமானால் அதை எடுத்துக் கொள்ளலாம். அது முன்னேறிய உயர் ஜாதியினரைப் போல, குறிப்பாகப் பார்ப்பனர்கள், அவர்களுக்கு அடுத்த நிலையில் இருக்கும் ஒரு சில ஜாதியினரைப் போல பரம்பரையாகக் கல்வி கற்கக் கூடிய வாய்ப்பை இந்தப் பெரும் சமூகத்திற்கு மறுத்து, அவர்களை ஒதுக்கி விட்டது. ஆனால் ஒரே கல்வி ஒரே தேர்வு என்று வரும் பொழுது, இப்படி ஒதுக்கப்பட்ட இடங்களில் இருந்து முதல் முறையாக இரண்டு மூன்றாம் தலைமுறையில் கல்வியை நோக்கி வருகிறவர்கள், அதேபோன்ற மதிப்பெண்ணையோ, போட்டித் திறன்களையோ வெளிப்படுத்த முடியாது என்கிற காரணத்தினால், அவர்களுக்கு எப்படி

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

## முதல் பக்க தொடர்ச்சி...

இந்த ஒரு பாதுகாப்பைக் கொடுப்பது என்ற ஆலோசனையில், சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற அளவீட்டில்தான் இடஒதுக்கீடு முதல் சட்டத் திருத்தத்தில் இடம் பெற்றது.

அதற்கு முன்பாக, தமிழ்நாட்டில் இருந்த, அப்போதைய சென்னை ராஜதானியில் நடைமுறையிலிருந்த கம்யூனல் G.O, வகுப்புவாரி உரிமைக்கு இந்த அளவீடுகள் எல்லாம் தேவைப்படவே இல்லை. இந்த இடத்தில் நாம் ஒன்றை மிகச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். வகுப்புவாரி உரிமை என்பது எல்லோருக்குமான, உயர் ஜாதிகள் அவர்களிலும் உயர்ந்த ஜாதிகள் ஆகிய எல்லோருக்குமான இடங்களை உறுதிப்படுத்தியது. 12 இடங்கள் என்றால் அதில் இரண்டு இடங்கள் பார்ப்பனருக்கு, இரண்டு இஸ்லாமியருக்கு, இரண்டு கிறிஸ்தவருக்கு என்று ஒதுக்கப்பட்டது. மற்ற சமூகங்களைப் பிரிக்கும் பொழுதும், பார்ப்பனரல்லாத இந்துக்கள் 5 பேர், பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர் ஒருவர் என்ற ஒரு சுழற்சி என்பது எல்லோரையும் உள்ளுக்குள் எடுத்துக் கொண்டது. ஆகவே அப்போது பிற்படுத்தப்பட்டவர் என்கிற பெயரோ, அதற்கு என்ன அளவீடு என்கிற கேள்வியோ அளவுகோலோ தேவைப்படவில்லை ஆனால் கம்யூனல் G.O செல்லாது என்று செண்பகம் துரைராஜன் வழக்கில் தீர்ப்புச் சொல்லப்பட்ட பிறகு, கம்யூனல் G.O சட்டப்படியாக அழிக்கப்பட்ட பிறகு, எந்த வகையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை அளிப்பது என்ற விவாதம் எழுந்து, அரசியல் சாசனத்தினுடைய முதல் சட்டத்திருத்தத்தைச் செய்யும் பொழுது, பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற அளவீடு செய்வதற்கான விவாதம் நடந்தது. எது அளவுகோல் - பொருளாதாரமா? கல்வி, சமூக நிலையா? என்ற விவாதத்தில், சமூக நிலை என்பதை எல்லோருமே ஒப்புக் கொண்டுவிட்டார்கள். அடுத்த காரணி என்பது எக்கனாமிக்கலா எஜுகேஷனலா? இதில் எக்கனாமிக் ஸ்கேல் என்பது 'elasticity' நெகிழும் தன்மை கொண்டது. ஒருவருடைய வருமானம் உயர்ந்தால் அவரது நிலை மாறிவிடும். ஆனால் ஒருவருடைய ஜாதி மாறுவதில்லை. அதனால் அவருக்கு ஏற்பட்ட பாதிப்பு மாறுவதில்லை. எனவே பொருளாதார அளவுகோல் என்பது நெகிழ்வுத் தன்மை உடையது, நிலைத்த அளவீடு அல்ல, அதை ஒரு கணக்கீடாக எடுத்துக்கொண்டால் மிக முரண்பட்ட செயல்பாடுகள் நடைமுறைக்கு வரும். அதில் பல்வேறு விதமான குழப்பங்கள் வரும் என்பவையெல்லாம் விவாதிக்கப்பட்டதுதான் பொருளாதார அளவுகோல் தேவையில்லை, *socially and educationally* என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதிலும்கூட அது *and*-ஆ *or*-ஆ என்பதற்குக் கூட விவாதங்கள் நடந்திருக்கின்றன. இவ்வளவு விவாதங்கள் நடந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கணக்கீட்டு முறையை போகிறபோக்கில் புறக்கணித்துவிட்டு, உயர்ஜாதி ஏழைகள் என்று பிஜேபி கருதக்கூடிய அல்லது காங்கிரஸில் இருக்கக்கூடிய உயர் ஜாதியினர் கருதக்கூடிய அல்லது பொதுவுடைமை இயக்கத்திலோ வேறு எந்த தேசிய இயக்கத்திலோ இருக்கக்கூடிய பார்ப்பனத் தலைமையும், அவர்களுக்கு நிகரானவர்களும் வழிநடத்துகிற இடத்தில் இருக்கும் அனைத்துத் தேசியக் கட்சிகளும் ஒருசேர ஆதரித்து, மிகப்பெரிய விவாதங்கள் நடத்தும் அவற்றைப் புறக்கணித்து விட்டு இந்த 103ஆவது சட்டத் திருத்தத்தைக்



கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டு வந்தாலும் கூட நீதிமன்ற பரிசீலனைக்கு உட்படுத்தும் போது, நீதிமன்றம் இதனைப் பல்வேறு கோணங்களில் பரிசீலிக்கத் தவறிவிட்டது. அதன் விளைவாக 5 நீதிபதிகளும் ஒரு கருத்தில் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள். ஒன்று பொருளாதார அளவுகோல் என்பது தவறல்ல, சரியானதுதான் என்பதில் ஐந்து நீதிபதிகளுக்குள் முரண்பாடு இல்லை. இரண்டாவது இப்படி ஒரு சட்டத் திருத்தத்தையும் ஒரு புதிய சட்டத்தையும் கொண்டு வருவது அரசியல் சாசனத்தின் முகப்புரைக்கு, அதனுடைய அடிக்கட்டுமானத்திற்கான அந்த முன்னுரைக்கு எந்த வகையிலும் முரண்பாடாக இல்லை என்றும் ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அதிலும் ஐவரும் ஒரே மாதிரியாக இருக்கிறார்கள். அவர்களுக்குள் பிரிந்த இடம் எது என்றால், ஏழைகளுக்கு ஒதுக்கீடு வைத்த பிறகு அதில் பிற ஜாதி ஏழைகளை விட்டு விடலாமா என்ற கேள்வி மட்டும்தான். அடிப்படையில் இந்தக் கேள்வியும் கூட இந்த இடஒதுக்கீட்டைப் பாதுகாக்கும் எண்ணத்தில் ஏற்படுத்தப்படுவதுதான். நியாயமான முறையில் அணுகினால், பொருளாதார அளவுகோல் என்பதே ஒரு நிலைத்த உறுதியான அளவுகோல் இல்லை எனும்போது, அந்த அடிப்படையில் செய்யப்படும் எதுவுமே, சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருக்கக்கூடிய உயர் ஜாதியினருக்கு நன்மை செய்கிற நோக்கத்தைக் கொண்டதுதான். அது பெரும்பாலான மக்களுக்கு எதிரானதுதான் என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, இது பெரும்பான்மை மக்களுக்கு எதிரானது, சமூக நீதிக்கு எதிரானது, அரசியல் சாசனத்துக்கு எதிரானது. அதில் இரண்டு கருத்துக்கு இடமேயில்லை.

**தமிழ்நாட்டைத் தவிர பிற மாநிலங்களில் இட ஒதுக்கீடு குறித்த புரிதல் போதுமானதாக இல்லை. காங்கிரஸ் கட்சியும் பொருளாதார இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவான நிலைப்பாட்டில் உள்ளது. இந்திய அளவில் பொருளாதார இட ஒதுக்கீட்டை எதிர்த்துப் போராட கட்சிகளை ஒருங்கிணைப்பதற்கான சாத்தியம் உள்ளதா அல்லது சட்ட ரீதியான போராட்டம் மட்டுமே சாத்தியமா?**

இடஒதுக்கீடு மட்டுமல்ல மொழியுரிமை, மாநில சுயாட்சி, பெண்ணுரிமை - போன்ற பல்வேறு முன்னேற்றத் திட்டங்கள் கருத்துகளில் தமிழ்நாட்டினுடைய திராவிட இயக்க அரசியல் ஏற்படுத்தி இருக்கக்கூடிய அந்தப் புரிதலும் அறிமுகமும், தமிழ்நாட்டு மக்களுக்கு இருக்கிறத் தெளிவும் வேறு மாநிலங்களுக்கு இல்லை என்பது நாம் இதுவரையில் பார்த்திருக்கக்கூடிய செய்திதான். ஆனால் இப்போது பல்வேறு மாநிலங்களில் பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகங்களில் இருக்கும் தலைவர்கள், அவர்களுக்காகச் செயல்படக்கூடிய இயக்கங்கள் இந்தப் பிரச்சனையில் இப்பொழுதுதான் கவனம் செலுத்தத் தொடங்கி இருக்கிறார்கள். நாம் தொடர்ந்து இதனை முன்னெடுத்து அரசு மூலமாகவும், இயக்கங்கள் மூலமாகவும் அனைவரையும் ஒருங்கிணைப்பதற்கு இது ஒரு சரியான நேரம். இந்த வாய்ப்பு உண்மையிலேயே, இந்த தேசியவாத ஆர்எஸ்எஸ் போக்குடைய ஆதிக்க வாதிகளையும் அவர்களுடைய நோக்கத்தையும் புரியவைப்பதற்கான நல்லதொரு வாய்ப்பு. இதனை நாம் அனைத்து முறைகளிலும் முயன்று அவர்களுக்குத் தெளிவுபடுத்தினால் கண்டிப்பாக இன்று குஜராத்திலேயே *GobackModi* ஹேஷ் டேக் என்று உருவாகிறது என்றால், நம்மால் அவர்களுக்குத் தெளிவு செய்ய முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு. அந்த முயற்சியில் நம்முடைய அனைத்து அமைப்புகளும் ஈடுபட வேண்டும். அவர்களை இணைத்துக்கொண்டு இயங்க வேண்டும் என்பது இன்றைய காலத்தின் தேவை.

**நேர்கண்டவர்: வெற்றிசெல்வன்**

# ‘ஆளுநரே! பதவி விலகு’ – சென்னையில் ஆர்ப்பாட்டம்







ஆளுநர் பதவி விலகக்கோரி 10-11-2022 அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடந்த ஆர்ப்பாட்டம்

# ‘அண்ணாமலையைக் கைது செய்’ – கோவையில் ஆர்ப்பாட்டம்




பா.ஜ.க. அண்ணாமலையைக் கைது செய்யக் கோரி 06-11-2022 அன்று, கோவையில் ஆர்ப்பாட்டம்

# ஈரோடு, நட்புக் கழகக் கூட்டம்






தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## பா.ஜ.கவின் பாச்சா உருண்டை!

பாரதீய ஜனதா கட்சியினால் அசைத்துக் கூடப் பார்க்க முடியாத திராவிடச் சித்தாந்த வேர்களைப் 'புடுங்க'ப் போகிறார்களாம் தமிழ் மண்ணிலிருந்து.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழரின் உயர்நெறியைப் புரிந்துதான் பேசுகிறாரா என்று தெரியவில்லை, தமிழகத்திற்கு வந்து, வந்து போகும் பிரதமர் மோடி.

அமித்ஷாவும் வந்து போகிறார். ஜே.பி.நட்டாவும் அவருக்குப் பின்னால் ஒன்றிய அமைச்சர்களும் வரிசையாக வரப்போகிறார்களாம் தமிழகத்திற்கு. ஏன்?

தங்கள் சுயநலத்திற்காக எந்த அ.தி.மு.க வைப் பிளவுபடுத்தினார்களோ, அந்த அ.தி.மு.க வை ஒன்று சேர்த்து, அதன் முதுகில் ஏறி 2024 இல் குறைந்தது 10 சீட்டுகளிலாவது வென்றுவிட வேண்டுமாம், இவர்கள்.

இதற்குப் பெயர்தான் நாரதர் வேலை, நரித்தனம்.

மறைந்திருந்து ராமன், வாலியின் மீது அம்பெய்தும் ராமாயணமும், கர்ணனின் கவச குண்டலங்களைக் கண்ணன் ஏமாற்றி வாங்கும் அவர்களின் மகாபாரதமும் காட்டுகின்ற வழிமுறைதானே இது.

இதனால் அ.தி.மு.கவுக்குத்தான் வீழ்ச்சியே ஒழிய, தமிழர்கள் கிஞ்சித்தும் ஏமாற மாட்டார்கள். திராவிடத்தை அவர்களால் அசைத்துக் கூடப் பார்க்க முடியாது.

- நான்கு வருணச் சாதிய சனாதனத்தை வேண்டும் என்கிறார் ஆளுநர். ஒன்றிய அரசு (இந்து) மதம் சார்ந்தது என்பன போன்ற சட்டத்திற்குப் புறம்பாகவும் பேசும் ஆளுநர், அரசு அனுப்பும் சட்ட முன்வடிவுகளைக் கிடப்பில் போட்டுவிடுகிறார்.
- ஆண்டுக்கு 2, 50,000 ருபாய் வருமானம் பெறும் சூத்திரர்கள் வரிகட்ட வேண்டுமாம். ஆனால் 8 லட்சம் வருமானம் பெறும் உயர் சாதியினர் ' அரிய வகை ' ஏழையாம், அவர்களுக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடாம்.
- ஒற்றைச் செங்கலோடு மழையில் நனைந்து கொண்டு இருக்கும் மதுரை 'எய்ம்ஸ்' மருத்துவமனையின் 95% வேலை முடிந்து விட்டதாம், அதனால் அந்த "எய்ம்ஸ்" மருந்த்துவ மனைக்கு ஒரு தலைவரையும் நியமித்து விட்டதாம் ஒன்றிய அரசு.
- ஜி.எஸ்.டி வரியால் மக்கள்படும் துன்பம், தமிழகத்திற்கு உரிய நிதியை தருவதில் இழுபறி, சமையல், வாகன எரிபொருள் விலையேற்றம்.

உள்ளிட்ட மக்கள் பிரச்சனைகளைப் பற்றிக் கவலைப்படாமல் அயோத்தி, ராமன், இந்துத்துவா, மதம் என்று மக்களைப் பிளவுபடுத்தும் பா.ஜ.கவை நன்றாகவே தெரிந்து வைத்துள்ளார்கள் தமிழர்கள்.

இது பெரியார் மண், திராவிடச் சித்தாந்த மண். இங்கே பா.ஜ.க. விற்க வரும் " பாச்சா உருண்டைகளை " யாரும் வாங்க மாட்டார்கள், உங்கள் கடையை இங்கே விரிக்காதீர்கள் !

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## 'சபாஷ்! சரியான போட்டி!' பி.எஸ்.வீரப்பா

எழில்.இளங்கோவன்



"நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. தலைமையில்தான் மெகா கூட்டணி " - கறாராகச் சொல்லிவிட்டார் எடப்பாடி.

"அ.தி.மு.க. தலைமையில்தான் கூட்டணி " - ஆமாஞ்சாமி என்கிறார் அண்ணாமலை.

"பா.ஜ.க.வோட நாங்கதான் கூட்டணி வைப்போம், மோடிதான் அடுத்த பிரதமர் " - ஓ.பி.எஸ் அணியின் கோவை செல்வராஜ் பிடிவாதம் இது.

பி.எஸ்.வீரப்பா பாணியில் சொன்னால் " சபாஷ்! சரியான போட்டி!"

ஏன் இந்தப் போட்டி? எல்லாம் 2024, நாடாளுமன்றத் தேர்தலுக்காகத்தான்.

எதற்கு இந்தப் போட்டி?

தி.மு.க ஒரு தீய சக்தி. சட்டசபையில் ஒரு துணைத் தலைவர் நாற்காலியக் கூட எங்களுக்குக் கொடுக்கவில்லை. ஸ்டாலின் தான் தடுத்தார். அவர் ஓ.பி.எஸ் கூட அரை மணி நேரம் பேசிவிட்டார். நான் பொதுச் செயலாளர், அடுத்த முலமைச்சர் நான்தான். அதனால் தி.மு.க வைத் தோற்கடிக்க 'மெகா' கூட்டணி அமைப்பேன் - இது எடப்பாடியின் கொள்கைப் பிரகடனம்.

அ.தி.மு.க. தலைமையில் 'தான்' கூட்டணி. ஆனால் முடிவு 'மேல' இருந்துதான் வரும். மோடிஜி தான் பிரதமர். அதற்கான 'ஆடு'தளம் அமைப்போம்! - தெளிவாக சொல்லிவிட்டார் அண்ணாமலை.

"இந்த ஆட்டுக்கும்
நம்ம நாட்டுக்கும்
பெருங் கூட்டிருக்குது கோனாரே
இதை ஓட்டி ஓட்டித் திரிபவர்கள்
ஒரு முடிவுங் காணாரே " - எவண்டா இந்த நேரம் பார்த்து இந்தப் பாட்டைப் பாடுறான்!

இல்லல்ல! நாங்க தான் அ.தி.மு.க! எடப்பாடி துரோகம் செஞ்சுட்டாரு, அவர் கூட யாருமே இல்ல. தி.மு.க.வைத் தோற்கடிக்க நாங்க பா.ஜ.கூட கூட்டணியில் இருக்கிறோம். ஆனா மோடிதான் பிரதமர் - ஓ.பி.எஸ் குரலாகக் கோவை செல்வராஜின் கொள்கைப் பிரகடனம் இது.

அ.தி.மு.க காரர்(1) : ஆமா, இது அசெம்பிளி எலக்சனா, இல்ல பார்லிமென்ட் எலக்சனா?

அ.தி.மு.க.காரர் (2): அட எதா இருந்தா என்னப்பா! 2024 தேர்தல்ல தி.மு.க.வ சுத்தமா தோற்கடிச்சா சரிதான். என்ன சொல்ற?

அப்போது அந்தப் பக்கம் வந்த திருமூலரை அண்ணாமலை, எடப்பாடி, ஓ.பன்னீர் செல்வம் ஆகிய மூவரும் வணங்கி 'அருளாசி ' கேட்கிறார்கள். திருமூலர் வழங்கிய 'திருமந்திர (ம்)' ஆசி, இதுதான்:

"குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி
குருடும் குருடும் குழி வீழுமாறே "

(எனக்கும் கொஞ்சம் பொழுது போகணுமில்ல. அதுதான், ஒரு கற்பனைய ஓடவிட்டேன்) ●